பக்கங்கள் 17+5

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 17 ஞாயிற்றுக்கிழமை 30.06.2024 அதிர்வு 335

## பதில் சட்டமா அதிபராக பதவியேற்கிறார் பாரிந்த



பதில் சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க பதவி யேற்கவுள்ளார்.

உயர்நீதிமன்றின் 02



# நாமல் அணியை வளைத்துப் போட ரணில் வியூகம்

## விரைவில் விசேட பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு மறுத்து வரும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான அணியை தம் பக்கம் வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி தரப்பு வியூகம் வகுத்துள்ளது என்று ஜனாதிபதி வட்டாரம் தெரிவித்துள்ளது.

இந்த அணியுடன் விரைவில் விசேட பேச்சு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அந்த வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது. 02

# இரணைமடுக் குளத்தில் மூழ்கி மாயமான முறிகண்டி சிறுவன் இன்று சடலமாக மீட்பு!



கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தில் நேற்று நீராடச் சென்ற வேளை நீரில் மூழ்கிக் காணாமல்போன 14 வயது சிறுவன் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்று வந்த முறிகண்டி – வசந்தநகர் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் ருஷாந்தன் என்ற சிறுவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுவன் நீராடுவதற்காகத் தனது சகோதரன் மற்றும் இரு நண்பர்களுடன் சென்ற நிலையில் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்தார்.

அவரைத் தேடும் பணியில் இரணைமடு மீனவர்களும், பிரதேச மக்களும், பொலிஸாரும் தீவிரமாக ஈடுபட்டிருந்த நிலையில் இன்று சடலமாக மீட்கப் படுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# யானையைக் கண்டு பயந்து ஓட்டோவை திருப்ப முயன்ற சாரதி வானில் மோதி பலி

புத்தளம் – அனுராதபுரம் வீதியின் 7ஆம் கட்டைப் பகுதியில் ஹயஸ் வானும் ஓட்டோவும் மோதியதில் ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அனுராதபுரத்தில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த ஓட்டோவின் சாரதி, வீதியைக் கடந்த காட்டு யானையைக் கண்டு, பயந்து, தனது ஓட்டோவைத் திருப்ப முற்பட்டபோது, ஓட்டோ புத்தளத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த ஹயஸ் வான் மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் இராஜாங்கனை – சோலவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துடன் தொடர்புடைய ஹயஸ் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வீதியின் ஊடாகத் தினமும் காட்டு யானைகள் நடமாடுவதாலும் கவனக்குறைவாக வாகனம் செலுத்தப்படுவதாலும் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இந்த வீதியில் இதுபோன்ற பல விபத்துக்கள் இடம்பெற்று, பல உயிர்கள் பலியாகியுள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

# மதுபானம் எனக் கருதி திரவத்தைப் பருகிய 6 மீனவர்களில் இதுவரை ஐவர் உயிரிழப்பு!

கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த திரவத்தை மதுபானம் எனக் கருதி அருந்தியதையடுத்து சுகவீனமடைந்த நிலையில் உயிரிழந்தனர் எனக் கூறப்படும் மீனவர்களின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

அதேநேரம் குறித்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தங்காலை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 4 ஆம் திகதி கடலுக்குச் சென்றிருந்த 6 மீனவர்களே சுமார் 380 கடல்மைல் தொலைவில் நேற்றுமுன்தினம் குறித்த சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பதில் சட்டமா...

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நாளை பதில் சட்டமா அதிபராக அவர் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.

14 நாட்களுக்கு அமுலாகும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பதில் சட்டமா அதிபராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி சட்டமா அதிபராகப் பதவியேற்ற சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக்காலம் கடந்த 26 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

சட்டமா அதிபராகப் பதவி வகித்து வந்த சஞ்சய் ராஜரத்னத்தின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்குமாறு அரசமைப்புச் சபையிடம் இரண்டு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்திருந்தார்.

எனினும், ஜனாதிபதியின் யோசனைகள், அரசமைப்பு சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் தீர்மானத்துக்கமைய இரண்டு சந்தர்ப்பங்களிலும் நிராகரிக்கப்பட்டிருந்தன.

அதற்கமைய கடந்த 26ஆம் திகதியுடன் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

இந்தநிலையில், பதில் சட்டமா அதிபராகப் பதவியேற்கவுள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க, முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஏ.பாரிந்த ரணசிங்கவின் புதல்வராவார்.

### நாமல் அணியை...


ஜனாதிபதி ரணிலின் கொள்கையுடன் ஒத்துப்போக முடியாது என்று நாமல் அணி மறுப்பதால் அவர்களுடன் பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

இந்த அணியுடன் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாட்டை ஜனாதிபதியுடன் சேர்ந்து இயங்கும் மொட்டுக் கட்சி அமைச்சர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சுப் பதவிகள் வகித்து வரும் மொட்டு எம்.பிக்கள் அனைவரும் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர். ரணிலையே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டின் வேட்பாளராக அல்லது பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று அவர்கள் கூறி வருகின்றனர்.

அமைச்சுப் பதவிகள் இன்றி மொட்டுக் கட்சியுடனேயே இருக்கும் மொட்டு எம்.பிக்கள் நாமல் ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர். குறிப்பாக இளம் எம்.பிக்கள் நாமல் பக்கமே உள்ளனர்.

ஆனால், மொட்டுக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் ரணிலுக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர்.



# கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களின் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கும் பணி ஆரம்பம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கும் பணியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னெடுத்துள்ளார்.

அதன் ஒரு அங்கமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தலைவர்களை ஆளுநர் செந்தில் தொண்டமான் மாவட்டம் மாவட்டமாக சந்தித்து வருகின்றார்.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்துக்கான சந்திப்பு நேற்று முன்தினம் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என் . மணிவண்ணன் அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி உள்ளிட்ட உரயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது காரைதீவு சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கருத்து தெரிவிக்கையில்,

“கொரோனா காலகட்டத்தில் எமது ஊழியர் ஒருவர் மரணம் அடைந்தார். இரண்டு குழந்தைகளின் தந்தை அவர். குடும்பம் நிர்க்கதியான நிலையில் நடுவீதிக்கு வந்திருந்தது. அதன் காரணமாக அவரது மனைவியை தற்காலிகமாக பணிபுரிய உதவினோம். இன்றும் பணியாற்றி வருகிறார். முடிந்தால்அவரை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததற்கு அங்கு பச்சைக் கொடி காட்டப்பட்டது .

மேலும் ஆளுநர் எங்களது பதவிக் காலம் முடிந்தாலும் எங்களை அரவணைத்து எங்களை உள்வாங்கி இந்த பணிகளை முன்னெடுத்துச் செல்வது வரவேற்புக்குரியது. நன்றி கூறுகின்றோம் என்று சொன்னார். அதுக்கு பதிலளித்த ஆளுநர் இது உங்கள் காலத்தில் உங்களால் ஆரம்பிக்கப்பட்ட கோரிக்கை.

ஆகவே தான் உங்கள் முன்னிலையில் இவர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்ற சிந்தனையில் உங்களை அழைத்து இருக்கின்றேன். ஆகவே அதற்கான வேலைகள் இன்னும் இரண்டு வாரத்தில் நடைபெறும்.” – என்றார்.







# பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் சூரிய மின் சக்தி கருத்திட்டம் அங்குரார்ப்பணம்

(எம்.எம்.றம்ஸீன்)

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் புதிய கட்டடத்தொகுதியில் சூரிய மின் சக்தி கருத்திட்டம் கல்லூரி அதிபர். பழைய மாணவிகளால் அங்குரார்ப்பணம் செய்து வைக் கப்பட்டது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தில் சூரிய மின் சக்தி திட்டம் கல்லூரி அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸிடம் கையளிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பழைய மாணவிகள் சங்கத்தின் உப தலைவி பெரோஸா முசம்மில், பழைய மாணவிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பிணர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி உறுப்பினர்கள் மற்றும் மாணவத் தலைவிகளும் கலந்து சிறப்பித்தனர்.

# உரித்து காணி ஆவணம் வழங்கும் நடமாடும் சேவை இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்றது

(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதியின் பணிப்புரையில் 'உரித்து தேசிய வேலைத்திட்டத்தின்' கீழ் நடமாடும் சேவை இரண்டாவது நாளாக இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலும், மாணிக்கமடுவில் அமைந்துள்ள இறக்காமம் – 07 ஆம் கிராம உத்தியோகத்தர் காரியாலயத்திலும் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸானின் ஆலோசனையில், உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி அஹமட் நசீல் தலைமையில் உரித்து காணி ஆவணம் வழங்கும் நடமாடும் சேவை சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக காணிப் பிரிவு காணி உத்தி யோகத்தர்கள், காணி வெளிக்களப் போதனாசிரியர், அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இறக்காமம் – 03,04 மற்றும் இறக்காமம்-07 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.













# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GSM குணம்ஸ் சுப்பர்மார்க்கட் GUNAAM SUPERMARKET

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week

**Till June 30th**



LOWEST PRICE 9.99$ Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE 15.99& Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE 12.99$ Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



சூடை

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

**Gunaam's super market canada dayஐ முன்னிட்டு இந்த வாரம் அள்ளித்தரும் super deal.** அனைத்துப் பலசரக்குப் பொருட்கள், தாயகத்து பழவகைகள், மீன், இறைச்சி அனைத்தும் **fresh** ஆகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Laxmi basmati rice - $12.99
Laxmi கைக்குத்தரிசி - $8.99
Laxmi சிவப்பு பச்சை அரிசி -$8.99
Laxmi முத்துச்சம்பா -$8.99
Laxmi red நாடு -$8.99
Priva basmati rice -$7.99
Atoulfo mango box -$14.99
Niru parboiled rice -$9.99
Niru 8lb மைசூர் பருப்பு -$7.99
Tropic Jaffna curry powder -$11.99
நாட்டுச் சர்க்கரை -$3.99

திரிபோஷா மா - $5.99
MD nelli cordial -$5.99
MD sherbet -$5.99
MR. Goudas tin milk 3 for - $10.00
Lazeez mango juice buy two-$5.99

இறால் -$3.99 lb
சூடை -$3.99 lb
சுராப்பாரை -$7.99 lb
U5 நண்டு -$19.99
காட்டுப்பன்றி -$5.99 lb

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மூல வளத்தை விற்றல்

நாடு எதிர்கொண்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு ஒரே வழி நாட்டை ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மாற்றுவதுதான். அதன் அர்த்தம் நாட்டின் வளங்களைச் சுரண்டி வெளிநாடுகளுக்கு விற்பதல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிலிருந்து அரசு தரப்பினர் மற்றும் பொருளாதார நிபுணர்கள்வரை ஏற்றுமதிப் பொருளாதாரம் குறித்துத் திரும்பத் திரும்ப வாய் மூலம் அதிகம் பிரபலாபித்தாலும் இவ்விடயத்தில் செயலில் நாடு அதிகம் முன்நகர்வதாகவே இல்லை என்பதுதான் யதார்த்தம்.

ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் ரொம்பவும் குறைவு. அதற்கான திட்டமிடலும், வழிகாட்டலும், தலைமைத்துவமும், முன்னநகரச் செய்யும் ஆளுமையும் இந்த அரசுத் தலைமையிடம் இல்லை. அதற்கான உழைப்பு, ஊக்கம், தியாகம், விடாமுயற்சி, வழிகாட்டல் எல்லாம் இலங்கையில் இருப்பதாகவும் தெரியவில்லை.

அத்தோடு, மிகுந்த சிரமத்துடன் அந்த வழியில் பயணித்தாலும் கூட உடனடியாக கைமேற் பலன் கிடைக்காது. நல்ல பெறுபேற்றுக்காகக் காத்திருக்க வேண்டும்.

அதனால், ஏற்றுமதிப்பொருளாதாரத்திற்கு மாறுவது குறித்து வெளியில் அதிகம் வாய்ப் பேச்சில் பிரசாரம் செய்து கொண்டு, கைமேல் பலன் கிடைக்கும் சந்தர்ப்பமான நாட்டின் சொத்துக்கள் மற்றும் வளத்தை விற்பதில்தான் ரணிலின் அரசுத் தலைமை அதிகம் ஈடுபாடு காட்டி வருகின்றது.

ஒருபுறம் மக்கள் மீது அதிக வரிச் சுமையை ஏற்படுத்தி வருமானத்தைத் தேடிக்கொள்வது. மறுபுறம் பொதுச்சொத்துக்கள், வளத்தை விற்பதன் மூலம் வருவாயைப் பெறுவது. இதுதான் ரணில் அரசின் வருமானமீட்டும் பிரதான இரண்டு மார்க்கங்களாகும். அது தெளிவானது.

பொதுச்சொத்துக்கள், வளங்களை விற்பது என்பதில் வருமானத்திற்காகக் காத்திருக்கத் தேவையில்லை. 'கையில் பணம்; பையில் பொருள்' என்ற கணக்கில் 'டீலை' முடிக்கலாம் என்பதால் இந்த விடயத்தில் தான் அதிக ஈடுபாடு காட்டப்படுகின்றது.

நாட்டின் சொத்து வளம் எங்கிருக்கின்றது என்பதைப் பூதக்கண்ணாடி போட்டுத் தேடிக் கண்டறிவது, அதற்கான திட்டங்களைத் தயாரித்து, வெளிநாட்டு கொள்வனவாளர்களை வலையில் வீழ்த்தி, வருமானத்தை ஈட்டி கொள்வதுமாக ஒரு பரந்த திட்டம் நாட்டில் கட்டவிழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி மற்றும் மன்னாரில் சர்ச்சைக்குரிய காற்றாலை மின்சாரத் திட்டம் போன்ற விடயங்களில் ஈடுபட்ட இந்தியாவின் அதானி குழுமத்துக்கு இலங்கையில் சத்தம் சந்தடியின்றி மூன்றாவது பாரிய திட்டம் ஒன்று - நாட்டின் மூல வளத்தைச் சூறையாடிச் சுரண்டிக் கொண்டு செல்லும் திட்டம் ஒன்று - வழங்கப்பட இருப்பதாக இப்போது அரசல் புரசலாகக் கதைகள் கட்டவிழ்ந்துள்ளன.

இலங்கையின் கடல் படுக்கையில் பெறுமதி மிக்க கனிமங்களைத் தோண்டி எடுத்துச் செல்வதற்கான திட்டமே இப்போது அதானி குழுமத்துக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை தன் கடல் எல்லை மீதான தனது இறைமையை 200 கடல் மைல்களுக்கு அப்பாலும் விஸ்தரித்து அறிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில் இலங்கைக்கு கிட்டவாக அஃபனசி நிகிடின் கடல் பகுதியில் கோபால்ட் நிறைந்த ஃபெரோமாங்கனீசு மேலோடு அமைந்துள்ளது. சர்வதேச கடல் போக்குவரத்துக்குப் பாதிப்பில்லாமல் கோபால்ட் அகழ்வுக்கான திட்டமே அதானி குழுமத்துக்கு வழங்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தில் அமையக்கூடிய கடல்சார் பொருளாதார மண்டலத்தில் பில்லியன் கணக்கான டொலர் மதிப்புள்ள அரிய உலோக கோபால்ட் படிவுகள் உள்ளன.

இந்த உலோகம் பல்வேறு வணிகத் தொழில்துறை மற்றும் இராணுவப் பயன்பாடுகளுக்கு - குறிப்பாக 'ரீசார்ஜபிள் பற்றிகள்' தயாரிப்பதற்கு - அவசியமானது எனக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே இலங்கையின் படுக்கையில் மீன்வளத்தை இந்திய மீனவர்கள் ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் முற்றாகச் சுரண்டிச் சூறையாடிச் செல்கையில், அந்த கடற் படுக்கையில் உள்ள கோபால்ட் படிவுகளை இந்தியாவின் அதானி குழுமம் சூறையாடிச் செல்ல ரணில் - ராஜபக்ஷ கூட்டரசு ஒழுங்கு செய்து கொடுக்கப் போகின்றது.

நாட்டை விற்றுத் தொலைத்து விட்டுத் தான் இந்த ஆட்சிப் பீடம் ஆட்சிக்கட்டை விட்டு இறங்கும் போல...!



# புத்தளம், மறிச்சிக்கட்டி ஊடான பாதை திறப்பு கலந்துரையாடல்

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் எலுவன்குளம், மறிச்சிக் கட்டி ஊடான பாதை திறப்பு தொடர்பான திறந்த கலந்துரையாடல் நேற்று முன் தினம் புத்தளம் பாலாவி அஸ்னா திரு மண மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடல் அஷ் ஷெஹ் தௌபீக் மதனியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது.

இதன்போது, இந்த பாதை திறப்புக்கான ஒத்துழைப்புக்களை சகலரும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிருலப்பனையில் இருந்து வருகை தந்த பௌத்த மதத் தலைவர் சங்கைக்குரிய விஜய கீர்த்தி தெரிவிக்கையில், தைரியமான சமூகமாக இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்ற கருத்தை முன் வைத்தார்.


தொடர்ந்து கலாநிதி நிஹ்மத்துல்லாஹ், கலாநிதி தமீம், மூத்த கல்விமான் பொறியியலாளர் புர்ஹானுத்தீன் மற்றும் நிப்ராஸ் ஆகியோர்களும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, மேற்படி பாதை திறப்பை வலியுறுத்தி கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஜுலை மாதம் மேற்கொள்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான இரு குழுக்களும் நியமிக்கப்பட்டன.








EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் யூலை மாதம் 6 ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தெரிவித்தார்.

உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலய கொடியேற்றம் எதிர்வரும் 06 ஆம் திகதி ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 16 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும்.


உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க கதிர்காமத் துக்கான உகந்தைமலை ஊடான காட் டுப்பாதையில் பயணிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.









Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# கேரள கஞ்சா விற்பனை; கைதானவரிடம் விசாரணை

நீண்ட காலமாக பாடசாலை மாண வர்களுக்கு கேரள கஞ்சாவினை சூட்சும மாக விற்பனை செய்து வந்த குடும் பஸ்தரை பெரிய நீலாவணை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலா வணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருத முனை மக்பூலியா பகுதியில் நேற்று இரவு கேரளா கஞ்சா விற்பனை இடம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினை பின்தொடர்ந்து பொலிஸ ார் பெரும் சிரமத்திற்கு மத்தியில் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 36 வயதுடைய குடும்பஸ்தர் என்பதுடன், அவர் வசம் இருந்து 11,100 மில்லி கிராம் கேரளா கஞ்சாவினை பொலி ஸார் மீட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நட வடிக்கை எடுத்துள்ளனர்.

# திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாறு நூல் உகந்தமலை முருகன் ஆலயத்தில் வெளியீடு

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த பிரபல கவிஞர் வைரமுத்து கணேசன் எழுதிய 'திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாறு' நூல் இன்று ஞாயிற்றுக்கிழமை உகந்தமலை முரு கன் ஆலயத்தில் வெளியிட்டு வைக் கப்பட்டது .

காரைதீவு பிரதேச சபையின் முன் னாள் தவிசாளரும் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய தலைவருமான கிருஷ் ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது .

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையா ளர் கமல் நெத்மினி கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வீ.ரி. சகாதேவராஜா, திருமலை ஆசிரியை திருமதி கி.குமுதினி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள் .

இதன்போது முதல் பிரதி அதைத் தொடர்ந்து இணைப்பிரதிகள் பக்தர் களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.














# றொட்டை வீரையடி பிள்ளையார் ஆலயத்தில் சங்காபிஷேகம்

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை, பொத்துவில் றொட்டை ஸ்ரீ வீரையடி பிள்ளையார் ஆலய வருடாந்த சங்காபிஷேகமும் நவகிரக ஆலய பிரதிஷ்ரா நிகழ்வும் நேற்று முன்தினம் ஆலய நிருவாகத்தலைவர் எஸ்.சுரேந்திரகுமார் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

பஞ்ச பூதங்களின் ஆசிர்வாதத்துடனும் மங்கள வாத்தியங்கள் முழங்க பக்தர்களின் அரோகரா கோஷங்களுடன் மிகசிறப்பாக இவ்விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் அபிஷேகத்திற்கான பாற்குடபவனியானது பொத்துவில் ஏத்தம் சாளம்பையடி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி பிரதான வீதி ஊடாக ஆலயத்தை வந்தடைந்தது. இந்த சங்காபிஷேக நிகழ்வுகள் யாவும் சங்காபிஷேக பிரதம குரு வேதாகம் ஞானபானு ஈசான சிவாச்சாரியார் தேவி பூஜா துரந்தரர் சிவஶ்ரீ. பத்மனே.நாகேஸ்வரதேவராஜா குருக்களின் தலைமையில் இடம்பெற்றது.







# ஊடக அமையத்தின் தலைவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்

(பழுவூரான்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலொன்று நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது,

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு கோல்டன் ரிவர் தனியார் விடுதியில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, மட்டு. ஊடக அமையத்தின் தலைவரும், ஊடகவியலாளருமான வா. கிருஷ்ணகுமார், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.




# கதிர்காமத்திற்கான கானகப் பாதை கிழக்கு ஆளுநரால் திறந்துவைப்பு

**(வி.ரி.சகாதேவராஜா, வடிவேல் டினேஸ்)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பூநாடா வெட்டி கானகப் பாதைக்கான கதவை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

வரலாறு காணாத வகையில் இம்முறை சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடியார்கள் முதல் தடவையாக முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்து சமய கலாசார முறைப்படி மூன்றாவது தடவையாக கழுகுமலைப்பத்து பாடி பிரதம குரு சிவ ஸ்ரீ சீதாராம் குருக்கள் பஞ்சாரத்தி காட்டியதும் கானகப்பாதைக் கதவு திறந்து வைக்கப்பட்டது.

இன்று அதிகாலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்கினார். காலை 7 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது.

இதன்போது, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் எந்திரி பி.இராசமோகன், லாகுகலை பிரதேச செயலாளர் என். நவநீதராஜா, மொனராகலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க, காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில், இந்து சமய செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான 56 நாள்கள் மிகநீண்ட பாதயாத்திரை சென்ற அடியார்கள் உள்ளிட்ட 4 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை .பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது .

சுமார் 6 நாள்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. இன்று 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை எதிர்வரும் 11 ஆம் திகதி மூடப்படுகிறது.

கதிர்காம கொடியேற்றம் 06 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது . 22 ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.






தொடர்ச்சி▼

# கதிர்காமத்திற்கான கானகப் பாதை கிழக்கு ஆளுநரால் திறந்துவைப்பு

தொடர்ச்சி▲















# சாய்ந்தமருது ஒஸ்மன் வீதி நிலை குறித்து பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது பிரதேச வீதிகளில் பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தும் வீதிகளில் மிகவும் முக்கியமான வீதி ஒஸ்மன் வீதியாகும்.

இந்த வீதி அண்மைக் காலமாக மக்கள் பயன்பாட்டுக்கு பொருத்தமற்ற முறையில் குன்றும் குழியுமாக மாறியிருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். அதிகளவான வாகனங்கள் போக் குவரத்து செய்யும் இந்த வீதியில் பல வியாபார நிலையங்களும் அமைந்துள்ளன.





மேற்படி வீதியில் அண்மையில் பெய்த தொடர் மழையினால் பாரிய குழி ஏற்பட்டு மழை நீர் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் போக்குவரத்து செய்யும்போது பலவிதமான அசௌரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர். குறிப்பாக, பல வியாபார நிலையங் கள் இந்த வீதியில் ஏற்பட்டுள்ள குழியின் பக்கத்தில் அமைந்துள்ளதாலும், அதி கமான முச்சக்கர வண்டிகள் நிறுத் தப்படுவதாலும் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

மோட்டார் சைக்கிளிலில் பயணிப்போர் எதிர்பாராத விதமாக இக்குழியில் வீழ்வதனால் காயங்களுக்குள்ளாகின்றனர் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியை விரைவாக சீர் செய்வதன் மூலம் விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

# பட்டிருப்பு தேசியக் கல்லூரியில் சின்னம் சூட்டும் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம். சபேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர்களது பெற்றோர்கள் , பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளர் தி.அம்பிகாபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.












# மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றம்



தமிழகத்தில் கள்ளச் சாராய மரணம் ஏற்பட்டால், கள்ளச் சாராயம் தயாரித்து விற்பவருக்கு ஆயுள்காலம் வரை கடுங்காவல் சிறை தண்டனையுடன், 10 லட்சம் ரூபா வரை அபராதம் விதிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா நேற்று தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்தில் தற்போது 1937ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டம் அமலில் உள்ளது.

இந்த நிலையில், சமீபத்தில் கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தி 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து, கள்ளச் சாராயம் தொடர்பான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் விதமாக, தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் என நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி சட்டப்பேரவையில் நேற்று சட்டத் திருத்த மசோதாவை அமைச்சர் சு.முத்துசாமி தாக்கல் செய்தார். மசோதாவில் கூறியிருப்பதாவது:

தற்போதுள்ள 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின்படி விதிகளை மீறி மது இறக்குமதி செய்துவது, ஏற்றுமதி செய்வது, அருந்துதல் ஆகிய குற்றங்களுக்கு தண்டனைகள் வழங்கப்படுகிறது.

இதேபோல், மனித உயிருக்கு கேடு விளைவிக்கக் கூடிய கள்ளச் சாராயத்தை தயாரித்தல், உடைமையில் வைத்திருத்தல், விற்பனை செய்வதுபோன்று வழக்கமாக ஈடுபடும் குற்றங்களுக்கு வழங்கப்படக் கூடிய தண்டனைகள் போதுமானதாக இல்லை என்று கருதப்படுவதால் இந்த சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

தமிழகத்தில் இருந்து கள்ளச் சாராயத்தின் அச்சுறுத்தலை முற்றிலுமாக ஒழிப்பது அவசியம் என்றும் அரசு கருதுகிறது. கள்ளச் சாராயத்துடன் கலக்கக் கூடிய எரிசாராயம், மெத்தனால் போன்ற தடைசெய்யப்பட்ட மதுபானங்களால் விலை மதிப்பற்ற உயிர்களை இழக்க நேரிடுவதால் கள்ள சாராய விற்பனையை தடுக்க தண்டனை அதிகரிப்பது அவசியமாகிறது. இதற்காக கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தில் சிறை தண்டனையின் கால அளவு, தண்டனைத் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கள்ளச் சாராயத்தை தயாரிக்கவும், கொண்டு செல்வற்கும், வைத்திருப்பதற்கும், நுகர்வுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கள்ளச் சாராயம் அருந்தி மரணம் ஏற்பட்டால், கள்ளச் சாராயம் தயாரித்து விற்றவருக்கு ஆயுள்காலம் வரை கடுங்காவல் சிறை தண்டனையுடன் 10 லட்சம் ரூபா வரை அபராதம் விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்படுகிறது.

இதேபோல குற்றங்களில் பயன்படுத்தும் அனைத்து அசையும் சொத்துகளையும் பறிமுதல் செய்வதோடு மது அருந்த பயன்படுத்தப்படும் உரிமம் இல்லாத இடங்களை மூடி சீலிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்த குற்றங்களை செய்யக்கூடிய நபர் எதிர்காலத்தில் இது போன்ற குற்றங்களை செய்வதிலிருந்து தடுப்பதற்கு கணிசமான தொகைக்கு உத்தரவாதத் தொகையுடன் கூடிய பிணை பத்திரத்தை நிறைவேற்றுவதற்கும் நிர்வாகத் துறை நடுவருக்கு அதிகாரம் அளிக்க வழிவகை செய்யும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற குற்றங்களை செய்து தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவரை அந்தப் பகுதியில் இருந்தே அகற்றுவதற்காக மதுவிலக்கு அதிகாரி அல்லது புலனாய்வு அதிகாரியால் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய் வதற்கும் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.


மேலும், கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் வகையில் இதில் ஈடுபடக் கூடிய வர்கள், பயன்படுத்தக்கூடிய பொருட்கள், இடம் என அனைத்தையும் வரைமுறைப்படுத்தி அதற்கான தண்டனைகளையும், அபராத தொகைகளை அதிகரிக்கவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குவதற்கான வழிவகையும் ஏற்படுத்தி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

# கள்ளச் சாராய விற்பனை முற்றிலும் தடுக்கப்படும்: சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

கள்ளச் சாராயம் விற்பனையை முற்றிலுமாக ஒழிக்க அரசு உறுதி பூண்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில், காவல், தீயணைப்புத் துறை தொடர்பான மானிய கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று உரையாற்றுகையில்,

"மக்களவைத் தேர்தல் முடிவுகளை சட்டப்பேரவை தொகுதி வாரியாக ஆய்வு செய்தால், திமுக கூட்டணி 221 தொகுதிகளை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. அதனால்தான், மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள், தினந்தோறும் அவைக்கு வந்து, அவையின் மாண்புக்கு குந்தகம் விளைவித்துச் சென்றுவிட்டனர். இந்த தேர்தல் தோல்வியை மறைக்க அவர்கள் போட்ட



சதித்திட்டம்தான், கள்ளக் குறிச்சி விவகாரத்தை தொடர்ந்து கிளப்பியது.

ஜூன் 19 ஆம் திகதி கள்ளக்குறிச்சி சம்பவத்தை கேள்விப்பட்டதும், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய சிகிச்சை அளிக்க உத்தரவிட்டேன். அதுகுறித்து அவையில் ஜூன் 20 ஆம் திகதி முழுமையான அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன். கள்ளக்குறிச்சி சம்பவத்துக்கான உண்மையான காரணத்தை அறிய ஓய்வுபெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஆணையம் அமைத்துடன், சி.பி.சி.ஐ.டி. விசாரிக்கவும் உத்தரவிட்டேன்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது பதவி நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளை 24 மணிநேரத்தில் எடுத்துள்ளோம். இதன் பிறகும் நடவடிக்கைகள் சரியில்லை என்று சொல்வது, அவர்கள் நடத்தும் திசைதிருப்பல் நாடகமாகும்.

கள்ளச்சாராய விற்பனை என்பது ஒரு சமூகக் குற்றம். விலைமதிப்பில்லாத மனித உயிர்களைப் பலி வாங்குகிற இதை முற்றிலுமாக ஒழிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது."- என்றார்.



# உக்ரைனில் ரஷ்யப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 7 பேர் பலி

உக்ரைனின் வில்னியன்ஸ்க் நகரில் ரஷ்யப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் இரண்டு சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர். 31 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் நகரின் உள்கட்டமைப்பு, ஒரு வர்த்தக நிலையம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் சேதமாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர மையத்தில் இராணுவ இலக்குகள் எதுவும் இல்லாத இடத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சபோரிஜியா பிராந்திய ஆளுநர் இவான் ஃபெடோரோவ் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் ரஷ்ய ஏவுகணைகளை அழிக்கக்கூடிய நீண்ட தூரம் தாக்கும் திறன் கொண்ட ஆயுதங்கள் மற்றும் உக்ரைனில் நவீன வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்குமாறு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி நட்பு நாடுகளுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



எவ்வாறாயினும் இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் ரஷ்யா எந்த பதிலையும் அளிக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.



# நைஜீரியாவில் 3 இடங்களில் குண்டுவெடிப்பு; 18 பேர் பலி

நைஜீரியாவின் போர்னோ மாநிலத்திலுள்ள குவோசா நகரில், நேற்றைய தினம் அடுத்தடுத்து 3 இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

திருமண நிகழ்ச்சி, மருத்துவமனை மற்றும் இறுதிச்சடங்கு என மூன்று இடங்களிலேயே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இக்குண்டு வெடிப்பில் சிக்கி 48 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும், அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

இந்த நிலையில், மேற்படி பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது குறித்த தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் - 5
ஞாயிற்றுக்கிழமை 30/06/2024

## பிளெமிங்டன் பார்க் விபத்தில் படுகாயம்

**ஒன்ராரியோ, ஜன் 30**

பிளெமிங்டன் பார்க்கில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

டொன் மில்ஸ் ரோட் தென்பகுதியில், கேட்வே பொலிவார்ட் C2 ▶



# மொன்ரியலுக்கு தெற்கே பல மணிநேரத்துக்கு ரயில் பாதையை மறித்த போராட்டக்காரர்கள்!

## இஸ்ரேலுக்கான விநியோக மார்க்கத்தை தடுக்கும் முயற்சியாம்

கியூபெக், ஜூன் 30

**பலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் 30 பேர் நேற்று மொன்ரியலுக்கு தெற்கே பல மணி நேரம் ரயில் பாதையை மறித்தனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

**ஊடே இற்கு சொந்தமான ரயில் பாதை மொன்ரியலை ஹாலிஃபாக்ஸ்“டன் இணைக்கிறது, மத்திய கிழக்கு நாட்டிற்கப் பொருள்கள் கப்பலில் ஏற்றப்படுவதற்காக இந்த மார்க்கத்தில் அனுப்பப்படுவதாக போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.**

**நான்கு அதிகாரிகள் மீது பெப்பர் ஸ்பிரே செய்யப்பட்டதாகவும், 20 மற்றும் 30 வயதுக்குட்பட்ட நான்கு பேர் தடங்கல் முதல் தாக்குதல் வரையிலான குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**



**கனடாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான “முக்கிய வர்த்தக வழியை“ மூடுவதே தமது இலக்கு எனவும், இஸ்ரேல் நாட்டுடனான அனைத்து வர்த்தகமும் நிறுத்தப்பட வேண்டும் எனவும்ம் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.**

# மார்க்கம் பகுதியில் வீடு ஒன்றின் மீது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம்!

## சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் தேடுகின்றனர்

**ஒன்ராரியோ, ஜூன் 30**

மார்க்கம் பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஃபெதர்ஸ்டோன்மற்றும்ஹைகிலென் அவெனியு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்த சந்தர்ப்பத்தில் எவரும் காயமடையவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெள்ளை வாகனம் C2 ▶





# ஒட்டாவாவில் 19 வயது இளைஞர் வெள்ளியன்று சுட்டுக் கொலை!

கனடாவின் ஒட்டாவாவில் வெள்ளிக் கிழமை இளம் வயதுடைய நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

19 வயதான யூசுப் சலாமான் என்ற இளைஞர் ஸ்மித் சாலை மற்றும் செயின்ட் லாரன்ட் பவுலவார்டு சந்திப்புக்கு அருகில் உள்ள ரஸ்ஸல் சாலையின் 1700 தொகுதியில் இரவு 10 மணியளவில் நடந்த துப்பாக்கி சூட்டில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒட்டாவா பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் துப்பாக்கி சூடு நடந்த நேரத்தில் அந்த பகுதியில் இருந்தவர்கள் அல்லது அந்த பகுதியின் கண்காணிப்பு காணொளி இருந்தால் தகவல் தெரிவிக்குமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுவரை சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



**பிளெமிங்டன்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அருகில் இந்த விபத்து இடம்பெற்ற பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் காயமடைந்த இருவரில், ஒருவர் கடும் காயங்களுடன் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றைய நபரும் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார் என தெரிவிக்கப்படுகின்றது.

**மார்க்கம் பகுதியில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஒன்றில் வந்த சந்தேகநபரே துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார் என்பதை சி.சி.ரி.வி காணொளியில் கண்டறிந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்தால் தமக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரியுள்ளனர்.




# தற்கொலைக்கு ஒன்லைனில் விஷம் விற்ற கனேடியருக்கு எதிரான வழக்கு 2025இல்!



கனேடியர்கள், பிரித்தானியர்கள் உட்பட பல பிள்ளைகள், கனேடியர் ஒருவரிடமிருந்து நச்சுத்தன்மை கொண்ட ரசாயனம் ஒன்றை ஒன்லைனில் ஓடர் செய்து வாங்கி, அதை உட்கொண்டு தங்கள் உயிரை மாய்த்துக்கொண்ட விடயம் பல நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

உயிரை மாய்த்துக்கொள்ள உதவும் ரசாயனம் ஒன்றை இணையதளம் வாயிலாக விற்பனை செய்து வந்திருக்கின்றார் ஒன்ராறியோவை மையமாகக் கொண்ட கெனத் லோ (வயது 58)என்னும் கனேடியர்,

கெனத் லோ, நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு சுமார் 1,200 பாக்கெட்கள் விஷம் அனுப்பியுள்ளார். நியூசிலாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, இத்தாலி, ஜேர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அதிகாரிகள் இந்த விடயத்தை உறுதி செய்துள்ளார்கள்.

அந்த ரசாயனத்தை வாங்கி உட்கொண்டு 127 பேர் வரை தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டார்கள். அதைத் தொடர்ந்து, பலருடைய தற்கொலைக்கு உதவியதாக, 2023ஆம் ஆண்டு, மே மாதம் கைது செய்யப்பட்டார் கெனத் லோ.

இந்நிலையில், கெனத் லோ மீதான வழக்கு விசாரணை, 2025ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 2ஆம் திகதி துவங்க இருப்பதாக, பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோருக்கு ஒன்ராறியோ நீதிமன்ற அலுவலர்கள் தகவல் தெரிவித்துள்ளார்கள். அந்த வழக்கு விசாரணை எட்டு வாரங்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கெனத் லோ மீது, கனடாவில் மட்டுமே 14 கொலை வழக்குகளும், உயிரை மாய்த்துக்கொள்வதற்கு உதவியதாக 14 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ட்ரூடோவின் தலைமைக்கு எதிரான அதிருப்தி கட்சிக்குள் வலுக்கின்றது



**ஒன்ராரியோ, ஜூன் 30**

லிபரல் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகல் வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் கட்சியை வழிநடத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் தாம் இருக்கின்றார் என ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்து வருகின்றார்.

இதேவேளை, கட்சிக்கு விசுவாசமான பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆலோசகர்களும் ட்ரூடோ பதவி விலகுவதற்கான தருணம் வந்துவிட்டதாகத் தெரிவித்து வருகின்றனர்.

2013ஆம் ஆண்டு முதல் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலின் வாக்களிப்பு நேற்று மொன்ரியலில்!



**கியூபெக், ஜூன் 30**

பிரான்ஸின் நாடாளுமன்றத் தேர்தலின் முதல் சுற்றின் ஒரு பகுதியாக நேற்றைய தினம் ஆயிரக்கணக்கான பிரெஞ்சு நாட்டவர்கள் மொன்ரியலில் வாக்களித்துள்ளனர்,

இது வளர்ந்து வரும் தீவிர வலது சாரி கட்சி மற்றும் அதன் பங்காளி கட்சிகள் தேர்தலில் முன்னிலை பெற வழிவகுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக் 260,000 பிரெஞ்சு குடிமக்களைக் கொண்டுள்ளது. அவர்களில் 200,000 பேர் மொன்ரியலில் வாழ்கின்றனர்.

பிரான்ஸின் பிரதான நிலப் பகுதிக்கு வெளியே உள்ள பிரெஞ்சு குடிமக்களின் மிகப்பெரிய மக்கள் தொகையை அவர்கள் உருவாக்குகின்றனர்.

மேலும் பிரெஞ்சு அரசாங்கத்தின்படி, வட அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் கால் பகுதிக்கும் அதிகமானவர்கள் கனடாவில் உள்ளனர்.

பிரெஞ்சு தேர்தல் முறையானது 11 வெவ்வேறு மாவட்டங்களில் வெளிநாட்டில் வசிக்கும் குடிமக்கள் ஒவ்வொருவரும் 577 இடங்களைக் கொண்ட தேசிய சட்டமன்றத்திற்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கிறது.



# பொலிஸ் வாகனத்தை வேண்டுமென்றே இடித்து விட்டுத் தப்பியவர் சிக்கினார்!



**ஒன்ராரியோ, ஜூன் 30**

பொலிஸ் வாகனம் ஒன்றின் மீதே வேண்டுமென்றே மோதிய வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விட்பி பகுதியில் திருடப்பட்ட வாகன இலக்கத் தகடுடனான வாகனம் ஒன்றை நிறுத்த முற்பட்ட போதே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சந்தேகநபர் பொலிஸாரின் வாகனத்தை இடித்துவிட்டு சம்பவ இடத்தில் இருந்து விரைந்துள்ளார்.

பொது மக்களின் உதவியுடன் அந்த வாகனத்தை மடக்கியமையுடன், வேறொரு வாகனத்தில் தப்பிச் சென்ற சந்தேகநபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் பெல் ரக ஹெலிக்கொப்டர் விபத்தில் சிக்கியது

## நோர்த்வெஸ்ட் டெரிட்டரிஸ் பகுதியில் சம்பவம்

**நோர்த்வெஸ்ட் டெரிட்டரிஸ், ஜூன் 30**

நோர்த்வெஸ்ட் டெரிட்டரிஸ் பகுதியில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்துத் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

கிரேட் ஸ்லேவ் ஹெலிக்கொப்டர்ஸ் 2018இனால் இயக்கப்படும் பெல் 212 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று போர்ட் குட் ஹோப் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஜூன் 28ஆம் திகதி விபத்துக்குள்ளாகியுள்ளது. ஹெலிக்கொப்டரில் அச்சமயம் விமானி மாத்திரமே இருந்துள்ளார்.

அதற்கு மேல் விவரங்கள் எவையும் வெளியாகவில்லை.

காட்டுத் தீ முகாமைத்துவச் செயற்பாட்டின் போது இந்த விபத்து இடம்பெற்ற நோர்த் வெஸ்ட் டெரிட்டரிஸின் தீயணைப்புப் பிரிவு உறுதி செய்துள்ளது.

இது ஒரு அவசரகால நிலை எனவும், பொருத்தமான அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் விடயம் கையாளப் படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தப்பகுதியில் வெப்ப, உலர் காலநிலை தொடர்ந்து வருவதுடன், பிராந்தியத்தில் உள்ள காட்டுத் தீ நிலைமை மேசாமடையக் கூடும் எனவும் அதிகாரிகள் குறிப்பிட:டுள்ளனர்.

